# இஎஸ்ஐ சார்பில் பயனாளிகளுக்கு உதவித்தொகை




▶ கோவை, ராமநாதபுரத்தில் உள்ள இஎஸ்ஐ சார் மண்டல அலுவலகத்தில் பயனாளி ஒருவருக்கு உதவித் தொகையாக ரூ.6.35 லட்சத்திற்கான காசோலையை துணை இயக்குநர் (பொ) கே.ஆர். ரவிக்குமார், உதவி இயக்குனர் பெருமாள், காட்டூர் கிளை மேலாளர் ரோஷன் வழங்கினர்.

கோவை, டிச. 17: தொழிலாளர் அரசு காப்பீட்டு கழகத்தின் சார்பாக கோவை, ஈரோடு, நீலகிரி, திருப்பூர் மாவட்டங்களில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் காப்பீடு பெற்ற தொழிலாளர்களுக்கு இடர் ஏற்படும் காலங்களில் பணம் மற்றும் மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் கோவை உள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றி, கொரோனா தொற்றினால் உயிரிழந்த மகேஸ்வரி குடும்பத்தினருக்கு உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி கோவை, ராமநாதபுரத்தில் அமைந்துள்ள இஎஸ்ஐ சார் மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் முதல் நிலுவை தவணை உதவித் தொகையாக ரூ.6 லட்சத்து 35 ஆயிரத்திற்கான காசோலை வழங்கப்பட்டது. மேலும், மாதந்தோறும் மகேஸ்வரி குடும்பத்தினருக்கு உதவி தொகையாக ரூ.15,347 நிர்ணயம் செய்து வழங்கப்படும் என்று அதிகாரிகள் கூறினர். இந்நிகழ்ச்சியில் இஎஸ்ஐ சார் மண்டல அலுவலகத்தின் துணை இயக்குனர் (பொ) கே.ஆர். ரவிக்குமார், உதவி இயக்குனர் பெருமாள், காட்டூர் கிளை மேலாளர் ரோஷன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.